## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,

குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண். ST.C.No. 319/2023**

2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 9ம் தேதி செவ்வாய் கிழமை குற்றம் முறையிடுபவரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி. தவமணி Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பிரபு | தொழில் | : கம்ப்யூட்டர் கடை |
| தந்தை பெயர் | :கலியபெருமாள் | சமயம் | : |
| கிராமம் | : வெளவால் குன்றம் | சாதி | : |
| வட்டம் | : செஞ்சி | வயது | : 37 |

**முதல் விசாரணை:**

1. நான் புகார்தாரர். இந்த வழக்கில் முதன்மை சாட்சியத்தை சத்தியபிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் கையொப்பம் என்னுடையது. முதன்மை சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் உண்மையாணவை. என் வழக்கிற்கு ஆதரவாக பின்வரும் ஆவணங்களை குறியீடு செய்கிறேன்.

1. 20.03.2023 தேதியிட்ட புகார்தாரருக்கு எதிரி வழங்கிய ரூ. 10,00,000/- மதிப்புக்கு சிட்டி யூனியன் வங்கி செஞ்சி வங்கி கிளை காசோலை எண். 000094-ன் காசோலை அசல் **ம.சா.ஆ 1.**

2. எதிரியின் வங்கி கணக்கில் Payment stopped by Drawer என்று Tamilnadu மெர்க்கண்டைல் வங்கி. செஞ்சி கிளையில் காசோலை திருப்பப்பட்டதற்காண 29.03.2023 ம் தேதியிட்ட குறிப்பாணை அசல் **ம.சா.ஆ. 2.**

3. **03.4.2023** தேதியிட்ட எதிரிக்கு, புகார்தாரர் வழக்கறிஞர் மூலமாக அனுப்பபட்ட சட்டப்படியான அறிவிப்பு அலுவலக நகல் **ம.சா.ஆ 3.**

4. சட்டப்படியான அறிவிப்பை எதிரிக்கு சார்வானதற்கான ஆன்லைன் டிராக்கிங் விவரம் அடங்கிய தாள் ம.சா.ஆ.4

**5.18.04.2023** தேதியிட்ட எதிரியின் பதில் அறிவிப்பின் நகல் **ம.சா .ஆ.5**

மேற்படி ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டன. மேற்படி ஆவணங்களை ஏற்று புகாரில் கோரியவாறு எதிரிக்கு உரிய தண்டனை மற்றும் உத்தரவு பிறப்பிக்கும்மாறு புகார்தாரர் கேட்டுக்கொள்கிறார்.

எதிரி தரப்பில் வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன் பேரில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.